2006 டிசம்பர் 5] [பேராசிரியர் க. அன்பழகன்]

(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2006) மற்றும் 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2006) ஆகியவற்றை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2006), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[பேராசிரியர் க. அன்பழகன்] [2006 டிசம்பர் 5

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2006) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கொண்டு வந்திருக்கிற சம்பளங்கள் வழங்குவதற்கான சட்டமுன்வடிவை வரவேற்கிறோம். அதேநேரத்தில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சில படிகளையெல்லாம் உயர்த்தியபொழுது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி நாங்கள் அப்போது அவையிலே எடுத்துவைத்த கருத்துகள் இப்பொழுது செயல்வடிவம் பெறவேண்டும் என்பதற்காக மீண்டும் அவற்றை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகின்றேன். இரண்டு நாளைக்கு முன்னால்கூட முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து அவர்களுக்கு வழங்கப்படக்கூடிய pension-ஓய்வூதியம் மிகவும் குறைவாக இருக்கிற காரணத்தினாலே அதைக் குறைந்தபட்சம் ஒரு பத்தாயிரம் ரூபாயாகவாவது மாதத்திற்கு உயர்த்த வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வைத்திருக்கிறார்கள். அதேபோல அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய medical allowance இப்பொழுது ரூபாய் 3,000 தான் வருகிறது. மாதத்திற்கு ஆயிரம் ரூபாய் என்று 12,000 ரூபாய் அவர்களுக்கு வழங்க வேண்டும். ஏனென்று சொன்னால், பல முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய நிலைமையையும் இன்று தமிழகம் பார்த்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய தமிழக முதல்வர் அவர்களை, பல ஏழை சட்டமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு முதல்வருடைய கவனத்தை ஈர்க்கின்ற வகையிலே வந்து சந்தித்திருக்கின்றார்கள்.

முற்பகல் 11–50

இப்போது பக்கத்திலே இருக்கக்கூடிய பாண்டிச்சேரியிலேகூட பார்த்தால் அங்கு இருக்கக்கூடிய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியத்தை அளிப்பதோடு, cell phone வசதியைக்கூட அவர்களுக்கு அங்கு இருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்கள், அரசு கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். ஆகவே இப்பொழுது டெல்லியிலே

@ 5–12–2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

2006 டிசம்பர் 5] [திரு. சி. ஞானசேகரன்]

இருக்கக்கூடிய தமிழ்நாடு இல்லம் போன்ற இல்லங்களில் தங்குகிறபோது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சலுகை அடிப்படையிலே வழங்குவதில்லை. அதாவது, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குகின்றபோது 60 ரூபாய் அங்கே கட்டணம் வசூலிக்கிறார்கள். ஆனால், அதுவே முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டெல்லியிலே இருக்கக்கூடிய தமிழ்நாடு இல்லத்தில் போய்த் தங்குகின்றபோது அங்கே 600 ரூபாய், 1,400 ரூபாய் என்றெல்லாம் கட்டணங்கள் மிக அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அங்கே போய்த் தங்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய Medical allowance, அதேபோல ஓய்வூதியம் போன்றவற்றையெல்லாம் உயர்த்தி, அவர்களுக்கு வாழ்வளித்து அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்ற வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே இப்போது முல்லை பெரியாறு பிரச்சினையிலே பேசுகிறபோதுகூட,

"கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!"

என்ற மனோன்மணியம் சுந்தரனார் பாடலைச் சொன்னார்கள். அந்தக் கன்னடமும் களிதெலுங்கும் என்கிற ஆந்திர மாநிலத்திலேகூட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதத்திற்கு 43 ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்குகிறார்கள். அங்கே வாகனப் படியே 15 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். ஆகவே, நாங்கள் எல்லாம் அதையே கேட்கவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசாங்கத்தினுடைய செலவிலேயே, அதாவது நீங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒரு காரை வாங்கிக் கொடுத்துவிட்டு சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அந்தக் காரைக் கொடுத்துவிட்டு maintenance செலவை அவர்களே டீசல், டிரைவர் எல்லாம் பார்த்துக் கொண்டு, பதவி போன பிறகு அதை மீண்டும் கலெக்டரிடம் சரண்டர் செய்யக்கூடிய அளவிற்கு — இந்த வாகனம்தான் இன்றைக்கு நிறைய பெட்ரோல் விலை உயர்ந்து போய், டீசல் விலை உயர்ந்து போய், வாகனங்கள் இரண்டு வருடத்திலேயே டிங்கரிங் வந்து படாதபாடுபடுத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே, பக்கத்து மாநிலமாக இருக்கக்கூடிய ஆந்திராவிலே அதாவது 15 ஆயிரம் ரூபாய் வாகனப் படி

என்று கொடுக்கிறார்கள். ஆனால், மகாராஷ்டிராவிலே வாகனங்களையே அரசாங்கமே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாங்கிக் கொடுத்துவிடுகிறது. அதாவது வி.ஐ.பி. வண்டி கொடுக்கிறமாதிரி கொடுக்கிறார்கள். பிறகு பதவி போகிறபோது அதைப் பெற்றுக்கொள்கிறார்கள். அந்த வகையில் பராமரிப்பு உட்பட டிரைவர் எல்லாவற்றையும் அரசாங்கமே கொடுப்பதைப்போல சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்குவதற்கான உத்தரவை வழங்க வேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமைகிறேன். நன்றி. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற இந்தச் சட்டமுன்வடிவைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வரவேற்றுப் பேசுகிற வேளையில், அமைச்சர் பெருமக்களுக்கு, அரசு கொறடாவிற்கு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, பயணப்படி மற்ற சலுகைகள் எல்லாம் நீங்கள் வழங்கி அறிவித்திருக்கிறீர்கள். இதற்கு முன்னால் சட்டமன்றத்திலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஊக்கத் தொகையாக பயணப்படி போன்றவை வழங்குகிறபட்சத்தில், உயர்த்துகின்ற ஒவ்வொரு கால கட்டத்திலேயும் முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும் உயர்த்தி வழங்கிய நடைமுறை இருந்து வந்திருக்கிறது. ஆகவே, இப்பொழுது தமிழ்நாடு முழுவதும் இருந்து முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இரண்டு நாட்களாக சென்னையிலே முகாமிட்டிருக்கிறார்கள். மாமன்றத்திலே வந்து அமர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களையும் சந்தித்ததாகச் சொன்னார்கள். ஆகவே, இது உரிய நேரம். நீங்கள் எல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற வேண்டுகோளையும் எங்களிடத்திலே வைத்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்கள் சார்பிலே நாங்கள் எல்லாம் இந்த நேரத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது, தாங்கள் கருணை உள்ளத்தோடு அவர்களுக்கான அந்தத் தொகையை உயர்த்தித் தாருங்கள் என்ற வேண்டுகோளை இங்கே நான் முன்வைக்க விரும்புகிறேன்.

அதேவேளையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் கடந்த நிதிநிலை அறிக்கை கூட்டத் தொடரிலேயே சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு அரசுத் தரப்பில் வாகனங்கள் வழங்கப்படும் என்ற ஒரு செய்தி வரவிருப்பதாக சட்டமன்ற

உறுப்பினர்கள் மிக மகிழ்ச்சியிலே இருந்தார்கள். அறிவிக்கப்படும் என்ற எதிர்பார்ப்போடும் இருந்தார்கள். ஆகவே, கடைசி நேரத்திலே அறிவிக்கவில்லையே எப்போது வரும், வரும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மீண்டும் இங்கே அனைத்துக் கட்சி உறுப்பினர்கள் சார்பிலே கேட்டுக்கொள்வதெல்லாம், அந்த வாகனங்கள் வழங்குவதை நீங்கள் விரைவாக வழங்குவதற்கு முன்வரவேண்டும் என்ற வேண்டுகோளையும் வைத்து இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமர்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன். *(குறுக்கீடுகள்)*

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எதிர்க்கிறேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [2006 டிசம்பர் 5

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2006), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,